**ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி**

**வேலூர் மாவட்டம்**

**கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் செயல்முறைகள்**

**ந.க.எண்: 730/மாஒ1/CG/ஒபக/2024 நாள்: 07.05.2024**

பொருள் : வேலூர் மாவட்டம் –ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – நான் முதல்வன் திட்டம் – அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல் குழு உறுப்பினர்கள் (12/13) வலுப்படுத்துதல் – வட்டார அளவிலான பயிற்சியில் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுதல் – சார்பு

பார்வை : சென்னை –06, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், உறுப்பினர் செயலாளர் அவர்களின் செயல்முறைகள், ந.க,எண்:680/L1/நாமு07/ஒபக/2024. நாள்: 02.05.2024

•••••••

பார்வையில் உள்ள சென்னை –06, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், உறுப்பினர் செயலாளர் அவர்களின் செயல்முறைகளின்படி நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர் கல்வி வழிகாட்டல்/ஆலோசனை வழங்குதல் குழு அமைக்கப்பட்டு 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாத/பள்ளி தொடர் வருகை தராத/பள்ளி இடை நின்ற மாணவர்கள் தமது கல்வியை தொடர தகுந்த வாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலும், 12ம் வகுப்பில் தேர்ச்சி அடைந்த அனைத்து மாணவர்களும் உயர்கல்வி பெறும் பொருட்டும் தலைமை ஆசிரியர் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர் தலைமையில் முன்னாள் மாணவர்கள், பள்ளி மேலாண்மை குழு தலைவர் மற்றும் துணைத் தலைவர், கல்வியாளர், கல்லூரி நாட்டு நல பணி திட்ட மாணவர்கள் இணைந்து செயல்படவும் மேலும் இக்குழுவினை வலுப்படுத்தும் நோக்கிலும் வரும் 9.5.2024 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள 8 வட்டார வளமைய அளவிலான பயிற்சியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பள்ளி அளவில் உள்ள உயர் கல்வி வழிகாட்டு குழு உறுப்பினர்கள் 12 அல்லது 13 பேரும் கலந்து கொள்ளுதல் வேண்டும். மேலும் பயிற்சியில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுக்கு பயணச் செலவினத்திற்கான தொகை மற்றும் மதிய உணவு வழங்கப்படும் எனவே அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் உயர் கல்வி வழிகாட்டு குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுதலை உறுதி செய்தல் வேண்டும்.

**பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டியவர்களின் விவரம்:**

1. அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் – 1
2. உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர் – 1 (மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கலந்துகொள்ளுதல் வேண்டும்)
3. பள்ளி மேலாண்மை குழு தலைவர் – 1
4. பள்ளி மேலாண்மை குழு துணைத் தலைவர் – 1
5. ITK தன்னார்வலர் – 1
6. முன்னாள் மாணவர்கள் – 5 பேர்
7. நாட்டு நல பணி திட்ட மாணவர்கள் – 2 பேர்

(த.பி.பா)

பயிற்சி நடைபெறும் இடம்:

| S.No | Name of the Block | No of schools | No of Participants | Training venue | Date and Time |
|---|---|---|---|---|---|
| 1 | Anaicut | 10 | 131 | SRI VIVEKANANDA MHSS ANAICUT | 09.05.2024, 09.30 AM to 04.30 PM |
| 2 | Gudiyatham | 13 | 164 | KMG COLLEGE | |
| 3 | K.V.Kuppam | 10 | 127 | GOVT BOYS HSS K V KUPPAM | |
| 4 | Kaniyambadi | 6 | 75 | GHSS KANIYAMBADI | |
| 5 | Katpadi | 15 | 195 | GOVT BOYS HSS KATPADI | |
| 6 | Pernambut | 5 | 67 | GOVT ADWHSS PERNAMBUT | |
| 7 | Vellore Rural | 7 | 88 | GOVT HSS KONAVATTAM | |
| 8 | Vellore Urban | 5 | 67 | GOVT MUSLIM HSS VELLORE | |
| Total | | 71 | 914 | | |

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
வேலூர் மாவட்டம்

பெறுநர்:

1. அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்

1. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை). வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ). வேலூர் மாவட்டம்